# ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 13.9.2017 112

2017ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டம்.

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
ஈரோடு மாநகராட்சி.

89)

**1)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கீழ்க்கண்டுள்ள ஆர்.கே.வி. ரோடு பின்புற லைன் கடைகளுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 31.08.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண் | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CE2 | திரு. கோபி ராமன் | 4,650- | திரு. டி.என். சுப்பரமணியம் | 4,960- |
| 2. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CN3 | திரு. எம். ராமஜெயம் | 4,250- | திரு. எஸ். சதீஸ்குமார் | 4,778- |
| 3. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CS1 | திரு. ஏ. குமரவேல் | 1,400- | திரு. ஆர். வெங்கடேஷ் | 1,588- |
| 4. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CS2 | திரு. எம். சங்கர் | 1,100- | திரு. எஸ். சிவகுமார் | 1,313- |
| 5. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CS3 | திரு. எஸ். சதீஸ்குமார் | 1,595- | திரு. என். கோபாலகிருஷ்ணன் | 1,360- |
| 6. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CS4 | திரு. எஸ். சதீஸ்குமார் | 1,540- | திரு. எம். திருமூர்த்தி | 1,350- |
| 7. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CS5 | திரு. எஸ். சிவகுமார் | 1,540- | திரு. எம். துரைசிங்கம் | 1,300- |
| 8. | ஆர்.கே.வி. ரோடு பின்புற கடை எண். CW1 | திரு. டி.என். சுப்பரமணியம் | 1,318- | திரு. ஆர். வெங்கடேஷ் | 1,100- |

வ.எண். 1 முதல் 8 வரை உள்ள ஏல இனங்களுக்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

மேற்படி ஏல இனங்களுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வியினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

மேற்படி இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவர்களுக்கு முன் அனுமதி பெற்று 01.09.2017 முதல் 31.03.2020 வரை மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(அ1/982/2017)

89) [illegible]

# ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 13.9.2017



**2)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கீழ்க்கண்டுள்ள நேதாஜி சாலை புதிய வணிக வளாக கடைகளுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29.08.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | நேதாஜி ரோடு புதிய வணிக வளாக தரைத் தளக் கடை எண். 16 | திரு. வி. குமரேசன் | 3,200- | திரு. ஆர். வெள்ளியங்கிரி | 2,710- |
| 2. | நேதாஜி ரோடு புதிய வணிக வளாக தரைத் தளக் கடை எண். 18 | திரு. வி. குமரேசன் | 3,250- | திரு. ஆர். வெள்ளியங்கிரி | 2,415- |
| 3. | நேதாஜி ரோடு புதிய வணிக வளாக தரைத் தளக் கடை எண். 19 | திரு. வி. குமரேசன் | 3,225- | திரு. ஆர். வெள்ளியங்கிரி | 2,525- |
| 4. | நேதாஜி ரோடு புதிய வணிக வளாக தரைத் தளக் கடை எண். 32 | திரு. ஆர். வெள்ளியங்கிரி | 1,005- | திரு. வி. குமரேசன் | 1,400- |

வ.எண். 1 முதல் 4 வரை உள்ள ஏல இனங்களுக்கு திரு. வி. குமரேசன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி ஏல இனங்களுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வியினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

மேற்படி இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவர்களுக்கு முன் அனுமதி பெற்று 01.09.2017 முதல் 31.03.2020 வரை மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**(அ1/982/2017)**

**3)** ஈரோடு மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண். வழக்கு எண். W.P.No. 24313, 24314/2016, 26332 முதல் 26340 ஆகிய 11 எண்ணிக்கை வழக்குகளுக்கு 13.03.2017–ந் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மாநகராட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்டதற்கு வழக்கு கட்டணமாக ரூ.1,10,000– வழங்குமாறு திரு.எம். ராஜமதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் என்பவரது 18.08.2017–ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இம்மாமன்றத் தீர்மானம் எண்.510, நாள். 29.05.2013–ல் மாநகராட்சியால் தாக்கல்

ரூ.6,000/– வீதமும், மூன்று வழக்கிற்கும் மேல் கூடுதல் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.1500/– வீதமும் அதிகபட்சம் ரூ.30000/– இரண்டு தவணைகளில் வழங்க அனுமதிக்கப்பட்டது.

எனவே மேற்படி 11 வழக்குகளும் தொகுதி வழக்காக உள்ளமையால் முதல் மூன்று வழக்கிற்கு ரூ.6000/– வீதம் ரூ.18,000/– மற்றும் மீதமுள்ள 8 வழக்குகளுக்கு வழக்கு ஒன்றிற்கு ரூ.1500/– வீதம் ரூ.12000/- ஆக மொத்தம் 30000/–ஆகிறது. எனவே மேற்படி வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ரூ.30000/–ஐ திரு. எம். ராஜாமதிவாணன் அவர்களுக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

91)

அலுவலகக்குறிப்பு –

திரு. எம். ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் என்பவருக்கு முன் அனுமதி பெற்று தொகை வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(அ2/5256/2015)

92)

4) ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட ஈரோடு வட்டம் 76 திண்டல் கிராமம் தற்போது 33 திண்டல் கிராமம் பட்டா எண். 25 பழைய க.ச.எண். 118 புதிய ரீ.ச.எண். 123/2 நெ.பு.ஹெ1.16.5க்குத் தரம் ரூ. 2.33, இதில் பு.ஏ.0.61–7/32 (நெ.பு.ஹெ 0.24.8) இதில் பு.ஏ.0.59.2 இந்த வகை விஸ்தீரண பூமியை ஒட்டி ஏற்கனவே தென்வடலாக நிலையில் உள்ள மாநகராட்சி சாலையிலிருந்து 30 அடி அகல கிழமேல் ரோட்டை நிலையிலுள்ள தென்வடல் நீள மாநகராட்சி ரோட்டுக்கும் கிழக்கு, கே. மோகன் அவர்கள் பாகச் சொத்துக்கும் தெற்கு, அத்தாயம்மாள் அவர்கள் விற்பனை செய்த பாகச் சொத்துக்கும் மற்றும் கே. மோகன் வசமுள்ள பு.ஏ.0.003 ¾ செண்ட் பூமிக்கும் வடக்கு, தென்வடல் நீள தடத்திற்கும் மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் (171.20 Mt ) 561 1/2 அடிகளும், கிழமேலாக தென்புறம் (165.20 Mt ) 541 ¾ அடிகளும், தென்வடலாக மேல்புறம் (9.15 Mt) 30.0 அடிகளும், தென்வடலாக கிழபுறம் (9.15 Mt) 30.0 அடிகளும், என இந்த வகை அளவுள்ள (1538.00 Sq Mt) 16,548 ¾ சதுரடிகள் விஸ்தீரணம் கொண்ட 30 அடி அகல கிழமேல் நீள ரோடு முழுவதும் மேற்படி சாலையில் தார் சாலை அமைக்கப்பட்டு சாலையின் தென்புறம் ஒருபுறமாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சாலையை 04.08.2017 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் மூலம் பத்திர பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலையினை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

92)

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1596 /2017)

93)

5) நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.24687/2011/ஆர்1 நாள். 30.08.2017-ன்படி ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் பஞ்சாயத்து ஆகியவைகளுக்கு சொத்துவரி சதுர அடி அடிப்படையில் உயர்வு செய்து கூட்டப்பொருள் வைத்து நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கியுள்ளார்.

அதன்படி கீழ்க்கண்டுள்ளவாறு பழைய ஈரோடு நகராட்சியில் 01.04.2008 முதல் சொத்துவரி பொது வரிச் சீராய்வில் கீழ்க்கண்டுள்ளவாறு மண்டல ரேட் நிர்ணயம் செய்யப்பட்டது.

மண்டலம் - A = ரூ.2.60
மண்டலம் - B = ரூ.2.10
மண்டலம் - C = ரூ.1.60
மண்டலம் - D = ரூ.1.10

அதன்படி கீழ்க்கண்டுள்ளவாறு ஈரோடு நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிகளுக்கு மண்டல ரேட் நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | உள்ளாட்சியின் பெயர் | A | | B | | C | | D | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பழைய மண்டல ரேட் | புதிய மண்டல ரேட் | பழைய மண்டல ரேட் | புதிய மண்டல ரேட் | பழைய மண்டல ரேட் | புதிய மண்டல ரேட் | பழைய மண்டல ரேட் | புதிய மண்டல ரேட் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | பெரியசேமூர் | 1.10 | 2.60 | 0.80 | 2.10 | 0.60 | 1.60 | - | - |
| 2 | சூரம்பட்டி | 1.50 | 2.10 | 1.20 | 1.60 | 0.90 | 1.10 | - | - |
| 3 | காசிபாளையம் | 1.10 | 2.10 | 0.90 | 1.60 | 0.65 | 1.10 | - | - |
| 4 | வீரப்பன்சத்திரம் | 1.50 | 2.10 | 1.20 | 1.60 | 0.90 | 1.10 | 0.30 | 1.10 |
| 5 | பி.பெ. அக்ரஹாரம் | 0.90 | 1.60 | 0.70 | 1.10 | 0.50 | 1.10 | - | - |
| 6 | சூரியம்பாளையம் | 0.80 | 1.60 | 0.60 | 1.10 | 0.40 | 1.10 | - | - |
| 7 | திண்டல் | 0.40 | 1.60 | - | - | - | - | - | - |
| 8 | வில்லரசம்பட்டி | 0.40 | 1.10 | - | - | - | - | - | - |
| 9 | கங்காபுரம் | 0.25 | 1.10 | - | - | 0.16 | 1.10 | - | - |
| 10 | எல்லப்பாளையம் | 0.25 | 1.10 | - | - | - | - | - | - |
| 11 | முத்தம்பாளையம் | 0.36 | 1.10 | - | - | - | - | - | - |

அலுவலகக் குறிப்பு :-

அனுமதிக்கலாம்.

(அ1/2515/2017)

**6)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள மண்டல அலுவலகக் கட்டிடம் (வீரப்பன் சத்திரம் அலுவலகம்) தற்பொழுது சூரியம்பாளையத்தில் புதியதாக மண்டல அலுவலகம் கட்டப்பட்டு அங்கு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது காலியாக உள்ள இக்கட்டிடம் பழையதாகவும், பராமரிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது. மேலும் இப்பகுதி வணிக உபயோக பயன்பாடு நிறைந்த பகுதியாக உள்ளபடியால் மேற்படி வளாகத்தில் பயன்பாட்டில் இல்லாமல் உள்ள அலுவலக கட்டிடங்களை இடித்துவிட்டு மாநகராட்சிக்கு வருமானம் ஈட்டும் நோக்கில் பல்நோக்கு வசதி கொண்ட வணிக வளாகம் கட்டலாம் என அலுவலக ஆய்வுக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் இடத்தில் பல்நோக்கு வசதி கொண்ட வணிக வளாகம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய (DPR) மேல் நடவடிக்கை தொடரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அனுமதி வழங்கலாம்.

(இ1/4402/2017)

# ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 13·9·2017



95)

7) ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண்.10-ன் உரிமதாரர் திரு எஸ்.கொற்றவேல் முருகன் என்பவர் மேற்படி கடையினை இம்மாநகராட்சி வசம் ஒப்படைக்க கடிதம் கொடுத்துள்ளார்.

ஆகவே பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்கு புறம்) கடை எண்.10-ன் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(அ1/198/2017)

13-9-2017